சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாக ஆணையரகம் – திரு.சு.சரண்குமார், இளநிலை உதவியாளராக கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

அரசாணை (ப) எண்.278

நாள் 17.08.2020
திருவள்ளுவராண்டு 2051
சார்வரி, ஆவணி 1

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.12/2020/அந2, நாள் 09.01.2020.

*****

ஆணை:

நகராட்சி நிர்வாக ஆணையர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திரு.பி.சுரேஷ்குமார் என்பவர் நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையராகப் பணிபுரிந்து வந்தபோது 30.09.2017–ல் பணியிடை மரணம் அடைந்ததால், அன்னாரின் மகன் திரு.சு.சரண்குமார் கருணையடிப்படையில் பணி வேண்டி 19.01.2018–ல் விண்ணப்பம் செய்தார் என்றும், தனியரின் விண்ணப்பம் மற்றும் அசல் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணி நியமன ஆணை 12.06.2018–ல் வழங்கப்பட்டதில், தனியர் 27.06.2018 முற்பகல் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

**2.** திரு.சு.சரண்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாள் 27.06.2018, முதல் பணிவரன்முறைப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

**3.** அரசாணை (நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்ததுறை, நாள் 01.08.2018–ன்படி கருணையடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

**4.** நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பானது, தகுந்த ஆவணங்களுடன் அரசளவில் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப்பின், நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையராகப் பணிபுரிந்து வந்தபோது 30.09.2017–ல் பணியிடை காலமான திரு.பி.சுரேஷ்குமார் என்பவரின் வாரிசுதாரர், திரு.சு.சரண்குமார் என்பவருக்கு தமிழ்நாடு

அமைச்சுப் பணியில், கருணை அடிப்படையில், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 27.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றை பெறத் தகுதியுடையவராகிறார்.

**5.** இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.8930/T1/2020–1, நாள் 06.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.16036/ஜி2/2020–1, நாள் 10.07.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 028.
திரு.சு.சரண்குமார், இளநிலை உதவியாளர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை – 600 028.
(வழி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 028)
மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.

<u>நகல்: –</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (T) துறை, சென்னை– 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.II) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

18/08/2020

**பிரிவு அலுவலர்**

18/8/2020